முருகப்பெருமான் துணை

**மகான் புகழ்சோழ நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.08.2022**, வியாழக்கிழமை

1. ஞானகுருவே அவதார அரங்கா
நம்பிக்கையூட்டி மக்களை மீட்கும்
தானதரும வழிகாட்டும் தேசிகா
தவராஜனே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது நள்ளி திங்கள்
குறைவிலா இருபானாற் திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 26 நாள், 11.08.2022 வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு புகழ்சோழ நாயனார் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உண்மை வழிகாட்டும் சன்மார்க்கம்
ஞானமெனும் அரங்கன் நெறியை
நம்பிவர கலியுகம் தானும் மாற்றம் பெறும்
4. மாற்றம்தனை மக்களிடை தர
மாதவசியாக வந்த அரங்கனிடம்
ஆற்றல்மிகு தீட்சை பலமிருக்க
அனைவரும் அரங்கனை அனுகி
5. அனுகி சிவதீட்சை தன்னை
அறிவிப்பேன் முழுமதியில் ஏற்க
அனுகுமே உலகமக்களுக்கு பலம்
ஆறுமுகனார் ஞான சக்தியாக
6. ஆகவே நிலைகள் எங்கும் பரவி
அறிவிப்பேன் அரங்கன் வழி
மிகையான தொண்டர்படைகளாகி
மண்ணுலகம் அமைதி பாதுகாப்பு மிக்க
7. மிக்கநல் ஆளுமை கொண்டு
மேலவர்கள் துணை ஆசிபட
ஆக்கமுள ஞான ஆட்சியாக மலரும்
அறிவிப்பேன் தயவே வடிவான
8. வடிவான தலைமைகள் பெருகி
வல்லமையான ஞான சமூகம்
வடிவேலனால் உருவாகும் என்பேன்
வளம் தரும் ஞானபலம் தரும்
9. தருகின்ற கலியினில் ஞானசபை
தவசி அரங்கன் குடிலே
ஆறுமுகப் பெருமானுக்கு ஆன
அறிவிப்பேன் ஏழாம் படைவீடு

10. படைவீட்டை நோக்கி உலகோர்
படையெடுத்து வருகை தர
தடையில்லா வளர்ச்சி கண்டு
தரணி சகல பாதுகாப்பும் காணும்

11. காணவே சடுதி மாற்றம்பெற
கண்டால் அரங்கன் திருவடி
ஞானத்திருவடியாக வழிகாட்டி தேற்றும்
நாட்டிவந்த அருளாசி முற்றே

–சுபம்–